# விரைவில், தமிழ்நாட்டினுடைய பிரதிநிதித்துவத்தையும் - அதிகாரத்தையும் குறைக்கத்தான், தொகுதி மறுசீரமைப்பு!

## கடலூரில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... 11–ஆம் பக்கத் தொடர்ச்சி!



பேசி தன்னுடைய ஆற்றலை வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார். அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் உங்களுடைய பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும் என்று நான் அன்புடனும் உரிமையுடனும் கேட்கிறேன்.

அடுத்து, நெய்வேலி சட்டமன்றத் தொகுதி! நமது வெல்லும் வேட்பாளர் சபா.ராசேந்திரன் அவர்கள்! 2006, 2016, 2021 என மூன்று முறை உங்களுடைய குரலாக சட்டமன்றத்தில் ஒலித்தவர். நெய்வேலி மக்களுடைய உயர்வுக்காகவும், தொகுதியின் மேம்பாட்டுக்காவும் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருப்பவர். அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் உங்கள் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி! நமது வெல்லும் வேட்பாளர் கொள்கைத் தோழமையாக விளங்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த, அப்துர் ரஹ்மான் அவர்கள். நம்முடைய எழுச்சித் தமிழர் தொல். திருமாவளவன் அவர்களின் அன்பைப் பெற்றவர். ஒடுக்கப்பட்ட மக்கள்–சிறுபான்மையினர் இடையேயான ஒற்றுமைக்காகப் பாடுபடுபவர். அவருக்கு, பானை சின்னத்தில் உங்களுடைய பொன்னான வாக்குகளை வழங்கிட வேண்டும்.

அடுத்து, புவனகிரி சட்டமன்றத் தொகுதி! நமது வெல்லும் வேட்பாளர் துரை. கி. சரவணன். நம்முடைய உள்ளத்தில் நிறைந்து வாழும் டாக்டர் துரை. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய மகன். தி.மு.க. பொறியாளர் அணியை வழிநடத்தி வருகிறார். சிதம்பரம் மற்றும் புவனகிரி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக மக்களுடைய குரலை எதிரொலித்தவர்.

எனவே, கடலூர் மாவட்டத்தில் இந்த 9 பேரின் வெற்றியும் உறுதியா? ('உறுதி' என, கூட்டத்தினர் குரல்!) நூற்றுக்கு நூறு அடிக்க வேண்டும். அதற்கு கடலூர் மாவட்டம் தயாரா? ('தயார்' என, கூட்டத்தினர் பலத்த குரல்) வெற்றி உறுதியாகிவிட்டது. வேட்பாளர்கள் உட்காரலாம்.

மகளிர் மேம்பாட்டுக்கு, முதல் நாள் முதல் கையெழுத்திலேயே, 'விடியல் பயணம்' திட்டத்தைச் சாத்தியப்படுத்தியவன்தான் இந்த ஸ்டாலின்! இன்றைக்கு நம்மைப் பின்பற்றி, நாட்டில் இருக்கும் பல்வேறு மாநிலங்களில், பெண்களுக்கு கட்டணமில்லாப் பயணத்தை அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய திட்டங்களை காப்பி அடித்தே பழக்கப்பட்ட அ.தி.மு.க.வும் அதைப் பற்றிக் கூறியிருக்கிறது. நான் கேட்கிறேன்... 2016 தேர்தல் அறிக்கையில், வயதானவர்களுக்கு எல்லாம் பேருந்துகளில் இலவசம் என்று சொன்னார்கள். செய்தார்களா?

### சொன்னதைச் செய்யும், திறன், தி.மு.க.வுக்கு மட்டுமே உண்டு!

தி.மு.க.வைப் பொறுத்தவரையில், சொன்னால், சொன்னதைச் செய்யும் வரலாறும், திறனும் தி.மு.கவிடம் மட்டும்தான் இருக்கிறது.

மகளிர் முன்னேற்றத்திற்கு அடிப்படையான இந்த 'விடியல் பயணம்' திட்டத்தை, நியாயமாக, பிரதமர் அவர்கள் வரவேற்றிருக்க வேண்டும். ஆனால், அவர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? "நகரங்களில் பெண்கள் கட்டணமில்லாமல் பேருந்துகளில் பயணிக்கும் காரணத்தினால், மெட்ரோ ரயில் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டதாம்." "மெட்ரோ லாபகரமாக இயங்க முடியவில்லை" என்று கவலைப்படுகிறார். பிரதமரே இப்படிப் பேசுகிறார் என்றால் என்ன பொருள்? அவருக்கு இந்தத் திட்டம் பிடிக்கவில்லை. மகளிர் முன்னேற்றத்தைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. அதுமட்டுமல்ல, அவர்கள் வந்தால் என்.டி.ஏ. ஆட்சியில் இந்த 'விடியல் பயணம்' திட்டத்தை நிறுத்திவிடுவார்கள் என்றுதான் பொருள்.

மோடியின் பேச்சை மீறிச் செயல்படும் துணிவு, பழனிசாமிக்கு இருக்கிறதா? நிச்சயம் இல்லை.

இங்கே இருக்கும் மகளிரைக் கேட்கிறேன், உங்களுடைய உரிமையான விடியல் பயணத்தை அ.தி.மு.க. அடிமைகள் நிறுத்த நீங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா? ('அனுமதிக்க மாட்டோம்' என, கூட்டத்தினர் குரல்!)

**விடியல் பயணம் மட்டுமல்ல, தமிழ்நாட்டைச் சீரழிக்க என்.டி.ஏ. கூட்டணி நிறைய திட்டங்களை வைத்திருக்கிறார்கள். என்ன அந்த பிளான்?**

**விவசாயிகளுக்கான இலவச மின்சாரத்தை நிறுத்திவிடுவார்கள். அதற்கான ட்ரெய்லர் தான், 'உதய்' மின் திட்டம்!**

**அதேபோன்று, தமிழை அழிப்பதற்கான பிளான்தான், மும்மொழித் திட்டம்!**

**அதுமட்டுமல்ல, மாநில மக்களே தங்களுக்கான அரசைத் தேர்ந்தெடுப்பதை நாசம் செய்யத்தான், "ஒரே நாடு – ஒரே தேர்தல்" திட்டம்!**

**அடுத்து, நம்முடைய உழைப்பையும், வரிப்பணத்தையும் சுரண்டுவதற்குத்தான், ஜி.எஸ்.டி!**

**விரைவில், தமிழ்நாட்டினுடைய பிரதிநிதித்து வத்தையும் – அதிகாரத்தையும் குறைக்கத்தான், தொகுதி மறுசீரமைப்பு!**

இவ்வாறு வரிசையாக NDA கூட்டணி நிறைய பிளான் வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் முறியடிக்க யாரால் முடியும் சொல்லுங்கள்? நம்மால் மட்டும்தான் முடியும், இங்கே மேடையில் இருக்கும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளால்தான் முடியும்.

நம்முடைய தமிழ்நாடு டாப் கியரில் முன்னோக்கிச் செல்ல வேண்டுமென்றால், திராவிட மாடல் 2.0 ஆட்சிதான் அமைய வேண்டும்.

### தமிழ்நாடு போதைப்பொருள் மயமானது, எடப்பாடி ஆட்சியில் தான்!

'பச்சைப்பொய்' பழனிசாமி ஆட்சியில், தமிழ்நாடு எப்படியெல்லாம் பாழாக்கப்பட்டது? கரப்ஷன், கமிஷன், கலெக்ஷன். இதுதான் பழனிசாமியின் 'டிரேட்மார்க்'! தொழில் தொடங்க வந்த கம்பெனிகள் எல்லாம், வெளிமாநிலங்களுக்கு ஓடினார்கள். அமைச்சர்களே குட்கா மாமூல் வாங்கினார்களே... மாமூல் பட்டியலில் இரண்டு டி.ஜி.பி.க்கள் இருந்தார்களே... பழனிசாமிக்கு தெரியாமலா இந்த மாமூல் வசூல் நடந்தது?

பழனிசாமி அவர்களே... தமிழ்நாடு போதைப் பொருள்மயமானது உங்கள் ஆட்சியில்தான். பட்டிதொட்டி எல்லாம் போதைப் பொருள் விற்கப்பட்டது உங்கள் ஆட்சியில் தான். கையைக் கட்டி வேடிக்கை பார்த்த உங்களுடைய பாக்கெட்டிற்கு வந்த மாமூல் எவ்வளவு? இப்படி என்னால் பழனிசாமி பற்றி, பெரிய லிஸ்டே போட முடியும்!

### கடலூர் மாவட்டத்திற்கான – கழக அரசின் சிறப்புத் திட்டங்கள்!

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியைப் பொறுத்தவரையில், வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்று சிஸ்டமேட்டிக்–ஆக திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறோம். வளர்ச்சி என்றால், அனைத்து மாவட்டங்களுக்கான வளர்ச்சியாக இருக்க வேண்டும் என்று, நம்முடைய திராவிட மாடலில் பார்த்துப் பார்த்து திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதில் சிலவற்றை மட்டும் ஹைலைட்டாக நான் சொல்ல விரும்புகிறேன்.

**சிதம்பரத்தில் புதிய பேருந்து நிலையம்.**

**பிச்சாவரம் சுற்றுலா மைய மேம்பாட்டுப் பணிகள்.**

**கடலூர் மாநகராட்சி அண்ணா பாலத்திற்கு அருகே, கெடிலம் ஆற்றின் குறுக்கே புதிய பாலம்.**

**சிதம்பரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.**

**அருவாள்மூக்கில் கடல்நீர் உட்புகுவதைத் தடுக்கவும், வெள்ள நீரை விரைவாக வடிய வைக்கவும் புதிய கால்வாய்.**

**குறிஞ்சிப்பாடி வட்டத்தில் பெருமாள் ஏரியைத் தூர்வாரி, கரைகளைப் பலப்படுத்தி, கொள்ளளவை மேம்படுத்தும் பணி.**

**திட்டக்குடியில் புதிய கால்நடை தீவன ஆலை!**

**இன்னும் நிறைய இருக்கிறது. சொன்னால் ஒரு நாள் போதாது.**

### பொய்கள் – அவதூறுகள் நிறைந்த, பழனிச்சாமியின் உரை!

நான் மேடைக்கு மேடை, சாதனைத் திட்டங்களை புள்ளிவிவரங்களுடன் சொல்கிறேன் அல்லவா... நான் கேட்கிறேன். என்றைக்காவது ஒரு நாள், ஒரே ஒரு நாள், பழனிசாமி தன்னுடைய சாதனைகள் இது என்று பட்டியல் போட்டுப் பேசியிருக்கிறாரா? சொல்வதற்கு சாதனைகள் ஏதேனும் பழனிசாமியிடம் இருக்கிறதா? இல்லை. அதனால் தான், அவருடையப் பேச்சு முழுவதும் பொய்களும், அவதூறுகளும் நிறைந்ததாக இருக்கிறது.

அவர் மட்டுமா...?

அவருடைய எஜமானர்களாக இருக்கும் பா.ஜ.க.வால்கூட எதுவும் சொல்ல முடியவில்லை. தமிழ்நாட்டுக்கு என்று எந்தத் திட்டத்தையும் அவர்கள் செய்தது கிடையாது. செய்யும் வழக்கமான திட்டங்களைக் கூட, எப்படியாவது உருப்படியாகச் செய்யக் கூடாது என்று நினைப்பவர்கள் அவர்கள்.

அதற்கான உதாரணங்களுக்கு எங்கேயும் தேடி அலைய வேண்டியதில்லை. பக்கத்திலேயே... அதுவும் நேற்று நடந்திருக்கிறது.

சிதம்பரம் பக்கத்தில், கொள்ளிடம் ஆற்றுக்கு முன்னதாக, தேசிய நெடுஞ்சாலையில், 6,431 கோடி ரூபாயில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் மேம்பாலம், திடீரென்று உள்வாங்கியிருக்கிறது. இதுதான், பா.ஜ.க. திட்டங்களின் தரம். இதனால்தான், அவர்கள் சொல்லிக் கொள்வதற்கு சாதனைகள் என எதுவும் இல்லை. முன் ஏர் எப்படிப் போகிறதோ, பின் ஏரும் அப்படியே தானே போகும்?

## "தி.மு.க. அரசு, எங்கள் அரசு!" என - பெண்கள் பெருமிதம்!

### தரம் தாழ்ந்து, கொச்சைப்படுத்திப் பேசுவது, 'பழனிசாமி அண்ட் கோ'–விற்கு புதிதல்ல!

ஏற்கெனவே, 'லிப்ஸ்டிக் பஸ்' என்று சொன்னார், பழனிசாமி! அவருடன் இருக்கும் அரைவேக்காடுகள் சும்மாவா இருப்பார்கள்? சி.வி. சண்முகம், எம்.ஆர். விஜயபாஸ்கர், திண்டுக்கல் சீனிவாசன் இவர்கள் பேசியதையெல்லாம், திரும்பச் சொல்வதற்குக்கூட நாக்கு கூசுகிறது. பெண்களை இழிவுபடுத்தும் ஆர்.எஸ்.எஸ். சங்கிக் கூட்டமாக, அ.தி.மு.க. மாறியிருக்கிறது. இப்போது, அண்ணா தி.மு.க. அல்ல; அது, அமித்ஷா தி.மு.க.வாக மாறியிருக்கிறது!

### "தி.மு.க. அரசு, எங்கள் அரசு!" என பெண்கள் பெருமிதம்!

நம்முடைய திராவிட மாடல் அரசில் எண்ணற்ற முற்போக்குத் திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறோம். அதனால்தான், பெண்கள் அனைவரும், "DMK கவர்மெண்ட் - எங்கள் கவர்மெண்ட்" என்று பெருமையுடன் சொல்கிறார்கள்.

உங்கள் உரிமைத்தொகையைத் தடுக்க வேண்டுமென்று யார் நினைத்தாலும், அந்தச் சதித் திட்டம் தோன்றும்போதே, அதை உடைப்பான், இந்த ஸ்டாலின்! அதற்கு சாட்சிதான், பிப்ரவரி 13. அந்த நாள், உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? காலையில் விடியும்போது, அலாரம் போன்று, ஐந்தாயிரம் ரூபாய் வந்துவிட்டது எனும் குறுஞ்செய்தி ஒலிதான், ஒரு கோடியே 31 இலட்சம் வீடுகளில் ஒலித்தது. ஒலித்தது என்று சொல்வதைவிட, மகிழ்ச்சியைக் கொடுத்தது. நல்லவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது; தமிழ்நாட்டை நாசப்படுத்த நினைப்பவர்களின் நிம்மதியைக் கெடுத்துவிட்டது. இப்போது பழனிசாமி, காப்பியடித்து "அந்த உரிமைத்தொகையை உயர்த்துவோம்" என்று சொல்லி இருக்கிறார்.

### தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையே, இத்தேர்தலின் "சூப்பர் ஸ்டார்"

'துரோகத்தின் முழு உருவமான' பழனிசாமி அவர்களே... ஏற்கெனவே கடந்த தேர்தலிலேயே உங்களுடைய பொய் வாக்குறுதிகளை நம்பாமல், மக்கள் உங்களைப் புறக்கணித்துவிட்டார்கள். இப்போது, உரிமைத்தொகை வாங்கும் பெண்களைக் கொச்சைப்படுத்திவிட்டு, எந்த முகத்தை வைத்துக் கொண்டு, புது வாக்குறுதியைக் கொடுக்கிறீர்கள்? சில நாட்களுக்கு முன்னர், அ.தி.மு.க.வின் பத்தாண்டுகால ஆட்சியின் தேர்தல் அறிக்கையில் சொன்னதையெல்லாம் நிறைவேற்றவில்லை என்று கூறினேனே? அதற்கு இதுவரைக்கும் பதில் சொன்னீர்களா? ஆனால், நான் சொன்னதை எல்லாம் செய்து முடித்து, தமிழ்நாட்டின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு "சூப்பர்ஸ்டாரை" நான் களத்தில் இறக்கியிருக்கிறேன். அதுதான் இந்தத் தேர்தல் அறிக்கை.

**"சூப்பர் ஸ்டாரு யாருனு கேட்டா, சின்னக் குழந்தையும் சொல்லும்... இந்தத் தேர்தல் அறிக்கைனு சொல்லும்".**

**இங்கு இருக்கும், மகளிரைக் கேட்கிறேன்... உங்களுக்காக ஸ்பெஷலாகக் கொண்டு வந்திருக்கும் திட்டம் தெரியும் அல்லவா? 'இல்லத்தரசி' திட்டம்... எவ்வளவு கூப்பன்?....**

### 'எட்டாயிரம் ரூபாய், என, கூட்டத்தினர் முழக்கம்!

எட்டாயிரம் ரூபாய் கூப்பன்! எவ்வளவு? எட்டாயிரம்! இந்தக் கூப்பனை வைத்து, உங்களுக்குத் தேவைப்படும் வீட்டு உபயோகப் பொருட்களை, புதிதாகவும் வாங்கிக் கொள்ளலாம்; இல்லையெனில், பழைய பொருளை 'எக்ஸ்சேஞ்ச்' செய்தும் புதுப் பொருளை வாங்கிக் கொள்ளலாம். உங்களுக்குப் பிடித்த கடையில், உங்களுக்குப் பிடித்த பிராண்ட்–ஐ வாங்கிக் கொள்ளலாம்.

அதுமட்டுமல்ல, இல்லத்தரசிகளுக்கு இனிமேல், உரிமைத்தொகை ஆயிரம் அல்ல... இரண்டாயிரம்...

நாம் கொண்டு வந்திருக்கும் காலை உணவுத்திட்டம், குழந்தைகளின் பசியைப் போக்கும் திட்டம் மட்டுமல்ல, இல்லத்தரசிகளின் பணிச்சுமையைக் குறைக்கும் திட்டம்! இனிமேல், காலை உணவுத்திட்டம் ஐந்தாம் வகுப்பு வரை மட்டும் அல்ல... எட்டாம் வகுப்பு வரை விரிவாக்கம் செய்யப் போகிறோம்! கூடுதலாக 15 இலட்சம் குழந்தைகள் சாப்பிடப் போகிறார்கள்.

அதுமட்டுமல்ல, 'புதுமைப்பெண்' திட்டத்திலும், 'தமிழ்ப்புதல்வன்' திட்டத்திலும் இனிமேல் ஆயிரம் அல்ல... ஆயிரத்து 500 ரூபாய்.

உயர்கல்வி முடித்த 5 லட்சம் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில், 'நான் முதல்வன்' திட்டத்தில் ஆயிரத்து 500 ரூபாய் உதவித்தொகையுடன் 6 மாதம் பயிற்சி வழங்கப் போகிறோம்.

விவசாயிகள் நிறைந்த மாவட்டம் இது. மகிழ்ச்சியான ஒரு அறிவிப்பு. ஏற்கெனவே படித்திருப்பீர்கள். இருபது இலட்சத்திற்கும் அதிகமான உழவர்கள் பயன்பெறும் வகையில், நவீன மின்சாரப் பம்புசெட்டுகளை வழங்கப் போகிறோம்! மகிழ்ச்சியா?

நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

கரும்பு கொள்முதல் விலை டன் ஒன்றுக்கு 4 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

இன்னொரு முக்கியமான வாக்குறுதி. இயற்கைச் சீற்றத்தால் அதிகம் பாதிக்கப்படும் மாவட்டம் எதுவென்றால், அது கடலூர் மாவட்டம்தான். உங்களுடைய வேதனையைத் துடைக்க வேண்டும் என்றுதான், போர்க்கால இழப்பீடுகளாக, "இறவைப் பாசனப் பயிர்கள் மற்றும் நெல் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாயும், நீண்டகாலப் பயிர்களுக்கு 27 ஆயிரம் ரூபாயும், மானாவாரிப் பயிர்களுக்கு 12 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்" என்று அறிவித்திருக்கிறோம்.

அடுத்து, பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும்.

முதியோர் உதவித்தொகை ஆயிரத்து 200 ரூபாயிலிருந்து 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்.

மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை ஆயிரத்து 500 ரூபாயிலிருந்து 2 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தப்படும்.

மீன்பிடித் தடைக்கால சிறப்பு நிவாரணத் தொகை 8 ஆயிரம் ரூபாயிலிருந்து 12 ஆயிரம் ரூபாயாகவும், மீன்பிடி குறைவுக் கால சிறப்பு நிவாரணத் தொகை 6 ஆயிரம் ரூபாயிலிருந்து 9 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

### டெல்டா மாவட்டங்களுக்கான – சிறப்பு வளர்ச்சித் திட்டம்!

**மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களில் நவீன உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.**

**இவையெல்லாம் மட்டுமல்லாமல், டெல்டா மாவட்டங்களுக்கான சிறப்பு வளர்ச்சித் திட்டம்.**

**கடலூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய்க்கான நவீன சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தப்படும்.**

**கடலூர் துறைமுகம் உலகத் தரத்திற்கு மேம்படுத்தப்படும்.**

**இவ்வளவு நேரம் சொன்னதெல்லாம், கொஞ்சம்தான்! தேர்தல் அறிக்கைப் புத்தகத்தில் இன்னும் ஏராளம் இருக்கிறது.**

**நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் பெண்களுடைய முன்னேற்றம் மட்டுமல்ல, நம்முடைய இளைஞர்களுக்குத் தரமான கல்வி கிடைக்க வேண்டும்; திறன் மேம்பாடு அடைய வேண்டும்; உயர்ந்த வேலைவாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்று பாடுபடுகிறோம்.**

**"கல்விதான் யாராலும் பறிக்க முடியாத சொத்து" என்று நான் சொன்னது மட்டுமல்ல, பலமுறை சொல்லிக் கொண்டே இருக்கிறேன். கல்விக்காக யார் பேசினாலும் அவர்களை மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறேன். அப்படித்தான், இதே கடலூர், சாத்திப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த செல்லப் பிள்ளைகள், தேவாவையும் - ஜீவாவையும் தலைமைச் செயலகத்திற்கே அழைத்துப் பாராட்டினேன். நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள்**

**அதேபோன்று, 'நான் முதல்வன்' திட்டத்தில் இதே கடலூர் மாவட்டம் - வேகக்கொல்லையைச் சேர்ந்த இந்துமதியும், வடகுத்து பகுதியைச் சேர்ந்த பத்மாவதியும் கடந்த ஆண்டு U.P.S.C. தேர்வில் வெற்றி அடைந்திருக்கிறார்கள்.**

### நம்பிக்கைகளின் வெற்றியே, 'திராவிட மாடல்' ஆட்சியின் வெற்றி!

இப்படி நம்முடைய பிள்ளைகள் பெறும் வெற்றியைத்தான் திராவிட மாடல் ஆட்சியின் வெற்றியாகப் நினைக்கிறேன். இதுபோன்று, திராவிட மாடலின் அடையாளமாக லட்சக்கணக்கான 'சக்சஸ் ஸ்டோரீஸ்' இருக்கிறது.

ஆனால், பழனிசாமி ஆட்சியின் அடையாளங்கள் என்ன? பொல்லாத ஆட்சிக்கு, பொள்ளாச்சியே சாட்சி! துப்புக்கெட்ட ஆட்சிக்கு தூத்துக்குடியே சாட்சி! கொடூரமான ஆட்சிக்கு கொடநாடே சாட்சி! கேடுகெட்ட ஆட்சிக்கு சாத்தான்குளமே சாட்சி! இவ்வாறு அனைத்தும் நெகட்டிவ்தான். இதெல்லாம் பழனிசாமி ஆட்சியின் பல்லிளிக்கும் லட்சணம்.

தவறுக்கு மேல் தவறுகள் செய்த பழனிசாமி, தன்னுடைய தவறுகளிலிருந்து தப்பிக்க சரண்டரான இடம்தான் பா.ஜ.க. வாஷிங்மெஷின்! தன்னுடைய தவறுகளில் இருந்து தப்பிக்க அவர் கொடுத்த விலைதான், தமிழ்நாட்டின் உரிமைகள்! தமிழ்நாட்டிற்குள் கால் பதிக்க முடியாத பா.ஜ.க.வுக்கு, பின்வாசலைத் திறந்துவிட வேண்டும் என்பதுதான், பழனிசாமிக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அசைன்மெண்ட்! அதனால்தான் சொல்கிறேன்... "நடக்கும் தேர்தல், தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா?" என்று அழுத்தமாக அனைத்து இடங்களிலும் கேட்கிறேன்.

ஆணவ பா.ஜ.க. - அடிமை அ.தி.மு.க. வேரோடு வீழ்த்தப்பட வேண்டும்!

"டபுள் எஞ்சின், டப்பா எஞ்சின்" என்று சொல்லிக் கொண்டு, டெல்லியின் ரிமோட் கண்ட்ரோலுக்கு ஆடும் அடிமைகள் தமிழ்நாட்டில் ஆளக் கூடாது! தமிழ்நாட்டை நாசப்படுத்த நினைக்கும் ஆணவ பா.ஜ.க.வும், அடிமை அ.தி.மு.க.வும் வேரோடும் வேரடி மண்ணோடும் வீழ்த்தப்பட வேண்டும். அதற்கு, தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம்தான் தமிழகத்தில் மீண்டும் ஆட்சி அமைக்க வேண்டும்.

கலைஞரின் மகனாக கேட்கிறேன்;

திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய குறிஞ்சிப்பாடியில் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கும், திட்டக்குடியில் சி.வெ. கணேசன் அவர்களுக்கும், நெய்வேலியில் சபா. ராசேந்திரன் அவர்களுக்கும், புவனகிரியில் துரை. கி. சரவணன் அவர்களுக்கும், சிதம்பரம் தொகுதியில் தமிமுன் அன்சாரி அவர்களுக்கும் உதயசூரியன் சின்னத்தில், உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

அதேபோன்று, விருத்தாசலத்தில் சகோதரி பிரேமலதா விஜயகாந்த் அவர்களுக்கு முரசு சின்னத்தில் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

பண்ருட்டியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த அப்துர் ரஹ்மான் அவர்களுக்கும், காட்டுமன்னார்கோயிலில் ஜோதிமணி அவர்களுக்கும் பானை சின்னத்தில் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்!

அதேபோன்று, கடலூரில் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த, ஏ.எஸ். சந்திரசேகரன் அவர்களுக்கு கை சின்னத்தில் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

### திராவிட மாடல் 2.0 ஆட்சி – சாதனைகளால் சிறக்கும் தமிழ்நாடாக விளங்கும்!

தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த விருப்பமாக அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில் சாதனைகளால் சிறக்கும் தமிழ்நாடாக விளங்கும்! இதை உங்களின் ஸ்டாலின் கேரண்டியாகக் கொடுக்கிறேன்! தமிழ்நாடு மென்மேலும் வளர்ந்திட, திராவிட மாடல் நல்லாட்சி தொடர்ந்திட, ஆதரிப்பீர் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை!

வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக!

நன்றி! வணக்கம்!

இவ்வாறு - கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.